# ஊழியரின் உரிமை ஆவணம்

நியாயத்தையும் மக்கள் மீதான அக்கறையையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு தொழில் தத்துவத்தில் மேக்னா பற்றுறுதி கொண்டுள்ளது. இந்தத் தத்துவம், நிறுவனத்தின் வெற்றியை உறுதிப்படுத்தும் பொறுப்பில் ஊழியர்களும் மேலாளர்களும் பகிர்ந்து கொள்ளும் மேக்னாவின் நியாய நிறுவன (ஃபேர் எண்டர்பிரைஸ்) கலாச்சாரத்தின் அங்கமாகும். இது இந்தக் கொள்கைகள் அடங்கியது.

## வேலை பாதுகாப்பு

இன்னும் நல்ல விலைக்கு இன்னும் நல்ல தயாரிப்பை உருவாக்குவதன் மூலம் போட்டிக்குரியவராய் இருப்பதே வேலைப் பாதுகாப்பை மேம்படுத்தச் சிறந்த வழி. உங்கள் வேலைப் பாதுகாப்பைக் காக்க உங்களுடன் சேர்ந்து பணிபுரிவதில் மேக்னா பற்றுறுதி கொண்டுள்ளது. மேக்னா உங்களுக்கு உதவுவதற்காக, வேலை ஆலோசனை, பயிற்சி மற்றும் ஊழியர் உதவித் திட்டங்களை அளிக்கும்.

## பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான பணியிடம்

உங்களுக்கு பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான ஒரு பணிச் சூழலை அளிப்பதில் மேக்னா பற்றுறுதி கொண்டுள்ளது.

## நியாயமாக நடத்துதல்

மேக்னா பாரபட்சமோ வேண்டியவர்களுக்கு ஆதாயம் அளிப்பதோ இல்லாமல் ஒரு தனிநபரின் தகுதிகள் மற்றும் பணிச் செயல்பாட்டின் அடிப்படையில் சமவாய்ப்புகளை அளிக்கிறது.

## போட்டி தன்மையுள்ள ஊதியம் மற்றும் நன்மைகள்

ஊதியம், நன்மைகள் ஆகியவை உள்ளிட்ட உங்கள் மொத்த சம்பளத்தை உங்கள் நேரடி போட்டி நிறுவனங்கள் மற்றும் உங்கள் பிரிவு போட்டியிடும் உள்ளூர் நிறுவனங்களின் ஊழியர்கள் பெறும் சம்பளத்துடன் மக்களுக்காக ஒப்பிட உதவும் தகவல்கள் மேக்னா உங்களுக்கு அளிக்கும். தன்மையுள்ள ஊதியம் மற்றும் நன்மைகள் உங்கள் மொத்த சம்பளம் போட்டிக்குரியதாக இல்லை எனக் கண்டுபிடிக்கப்பட்டால், உங்கள் மொத்த சம்பளம் சரிப்படுத்தப்படும்.

## ஊழியர் உரிமைப்பங்கு மற்றும் இலாப பங்கேற்பு

நிதி நிறுவனத்தின் நிதி ரீதியான வெற்றிக்கான பங்கை ஒவ்வொரு ஊழியரும் பெற வேண்டும் என்று மேக்னா நம்புகிறது.

## தகவல் தொடர்பியல் மற்றும் தகவல்

மேலாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் இடையே தவறாமல் நிகழும் மாதந்திர சந்திப்புகள் மூலமும் பிரசுரங்கள் வாயிலாகவும், மேக்னா உங்களுக்குத் தகவல்கள் அளிக்கும். இதன் மூலம் நீங்கள் உங்கள் நிறுவனத்திலும் தொழில்துறையிலும் என்ன நடக்கிறது என்று அறிவீர்கள்.

## ஹாட்லைன்

உங்களுக்கு ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால், அல்லது மேற்கண்ட கொள்கைகள் பின்பற்றப்படுவதில்லை என்று நீங்கள் கருதினால், ஹாட்லைனைத் தொடர்பு கொண்டு உங்கள் புகார்களைப் பதிவு செய்யும்படி உங்களை ஊக்குவிக்கிறோம். நீங்கள் உங்கள் பெயரைச் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் அப்படிச் சொன்னால் அது மிக ரகசியமாக வைத்திருக்கப்படும். ஹாட்லைன் ஆய்வாளர்கள் நீங்கள் எதிர்பார்த்தபடி விடையளிப்பார்கள்.

**ஹாட்லைன் எண்: 0008004402485**

MAGNA

ECMTaIN201503